# <u>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை</u>
## <u>நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 3</u>
## <u>2026, மே 13, புதன்கிழமை</u>
## <u>சித்திரை 30, திருவள்ளுவர் ஆண்டு – 2057</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கின:–

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து**
**அதனை அவன்கண் விடல்."**

(இந்தத் தொழிலை இக்கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.)

1. <u>அரசினர் தீர்மானம்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

"திரு. C. ஜோசப் விஜய் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது."

மேற்காணும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் திரு. செ. ராஜேஷ் குமார், திரு. ஆர். செல்லசுவாமி, திரு. வன்னி அரசு, திரு. அ.மு. ஷாஜகான், திரு. எஸ். காமராஜ், திரு. ட்டி. இராமச்சந்திரன் மற்றும் திரு. எஸ்.பி. வேலுமணி ஆகியோர் தீர்மானத்தினை ஆதரித்தும், திருமதி பிரேமலதா விஜயகாந்த், திரு. மு. தமிமுன் அன்சாரி, திரு. K. நித்தியானந்தன், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா மற்றும் திரு. எடப்பாடி K. பழனிசாமி ஆகியோர் தீர்மானத்தினை எதிர்த்தும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் கருத்துக்களைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தும், முனைவர் (திருமதி) சௌமியா அன்புமணி மற்றும் திரு. எம். போஜராஜன் ஆகியோர் தீர்மானத்தில் நடுநிலை வகிப்பதாகவும் தெரிவித்து கருத்துக்களைத் தெரிவித்தனர்.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த உறுப்பினரும் வெளிநடப்பு செய்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி–99(5)–இல் குறிப்பிட்டுள்ளவாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மொழிப்பட்ட தீர்மானம் எண்ணிக் கணிக்கும் முறைப்படி (Division) பேரவையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, கீழ்க்கண்டவாறு எண்ணிக் கணிக்கப் பெற்றது.

| | | |
|---|---|---|
| தீர்மானத்தை ஆதரித்தவர்கள் | – | 144 |
| தீர்மானத்தை எதிர்த்தவர்கள் | – | 22 |
| நடுநிலை வகித்தோர் | – | 5 |

அமைச்சரவை மீதான நம்பிக்கை கோரும் தீர்மானம் ஏற்கப்பட்டதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் வாழ்த்துரைகளை வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள்.

..2

2. <u>பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானம்</u>

சட்டமன்றப் பேரவை விதி 25(1)–இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பேரவை முற்பகல் 11.55 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

**முனைவர் கி. சீனிவாசன்,**
**முதன்மைச் செயலாளர்.**